## அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1:2:1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 01 | | கணக்காண்டுகளுக்குரிய சகல வருமானங்களும் செலவுகளும் விபரமான வருமானக் கூற்றில் காண்பிக்க வேண்டிய போதிலும் பதவியணியினர் கடன் மீள்சுழற்சி நிதியத்திற்குக் கிடைத்த வட்டி அக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 16 | (i) | கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்பெறுமதியிடப்பட்டிருக்கவில்லை. எனினும், மீதியை பதிவழிக்கப்பட்டதை அடுத்து ரூபா 5 பெறுமதியாக நிதிக்கூற்றுக்களில் |

காண்பிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் ஒரு பகுதி வருடாந்தம் ரூபா 15 மில்லியன் பெறுமதிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அக் கட்டிடத்தின் பெறுமதி மீள்பெறுமதியிடப்பட்டு அதன் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிராமையால் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களினதும் மூலதனத்தினதும் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே அக் கட்டிடத்திற்கு உரித்தான பெறுமானத்தேய்வுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிராத காரணத்தால் இலாபமும் அப் பெறுமானத்தேய்வுப் பெறுமதிக்குச் சமனான தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் உள்ள 74 காணிகளின் உரித்து கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அச் சொத்துக்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிராமையால் சொத்துக்களின் பெறுமதியும் மூலதனத்தினதும் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 37

நிகழத்தக்க பொறுப்புகளுக்கான ஒதுக்கம் அல்லது வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அது தொடர்பில் நியமத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

- பகவன்தலாவை செபல்டன் வியாபார சமப்படுத்தல் காணி நிலத்தில் அதிகாரமின்றி வெட்டி அகற்றப்பட்டதன் காரணமாக ரூபா 32,462,148 தொகையான நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

- ரம்பகன் ஒய நீர்த்தேக்கத்திற்கு உட்படும் நிலத்தின் மரங்களை அகற்றுகையில் ஏற்பட்ட முறைகேடுகள் மற்றும் வன மோசடிகள் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 35,169,565 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

- செலுத்த வேண்டிய செலவுகளான ரூபா 188,667,206 தொகையில் உள்ளடங்கிய ரூபா 65,209,269 தொகையான அரசாங்கத்திற்குரிய பகுதி 2011 ஆம் ஆண்டின் போது வனப் பாதுகாப்புத திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டியதாக 2013 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறும் உடன்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. அது நிகழத்தக்க பொறுப்பிற்கான ஒதுக்கமாக கணக்குகளில் காண்பிக்கப்படாது அட்டுறு செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

- வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தர் முறைப்பாடுகளில் இருந்து குற்றமற்றவராகத் தீர்ப்பளிக்கப்பட்டமையால் நிலுவைச் சம்பளமாக ரூபா 1,957,174 தொகையைச் செலுத்த நேர்ந்த போதிலும் இதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 40

மரக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான பத்தரமுல்லவில் உள்ள தலைமை அலுவலக வளாகத்தில் ஒரு பகுதி சுற்றாடல் மற்றும்

மீள் குடியேற்ற மின்சக்தி அமைச்சிற்கும் வன பாதுகாப்பு திணைக்களத்திற்கும் வருடாந்தம் ரூபா 15,154,488 இற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அக் கட்டிடத்தின் பெறுமதி முதலீட்டு சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டு கொள்கை

வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் தொடர்பான கணக்கீட்டு கொள்கை இறுதிக் கணக்குகளில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய அரசாங்கத்திற்குரிய பகுதி கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 474,283,658 ஆன போதிலும் வனப் பாதுகாப்பு திணைக்களக் கணக்குகளின் பிரகாரம் பெறவேண்டிய தொகை ரூபா 560,288,680 ஆகக் காணப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களுக்கும் திணைக்களத்திற்கும் இடையே ரூபா 86,005,022 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அவ் வேறுபாட்டிற்கான காரணங்கள் தொடர்பில் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொத்த வியாபாரக் கடன்பட்டோர் ரூபா 637,121,375 ஆகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 405,368,846 தொகை 90 நாட்களுக்கு மேலான கடன்பட்டோர் மீதியாகக் காணப்பட்டது. இது மொத்த கடன்பட்டோரில் 64 சதவீதமாகும்.

(ஆ) தனியார் நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதியில் ரூபா 11,873,954 தொகை 1983 ஆம் ஆண்டு முதல் ஒரு தனியார் கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியாகக் காணப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தினால் 1988 ஆம் ஆண்டின் கதிர்காமம் "அஷ்தபல" நிதியத்திற்கு ரூபா 2,000,000 தொகையான வட்டியில்லாக் கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது இதில் ரூபா 40,000 தொகை பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,075,000 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

(ஈ) 2010 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே நிலவிவரும் ரூபா 398,627 தொகையான செலுத்தப்பட வேண்டிய விற்பனைப் புரள்வு வரி மீதி 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மர வழங்குனர்களால் கூட்டுத்தாபனத்திற்கு மரம் வழங்கப்படுவதற்காக வைக்கப்பட்டிருந்த மீளச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,270,950 தொகை 2 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகள் வரையான காலமாக நிலவிவரும் கேள்வி வைப்பு, வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கோ அல்லது விடுவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்வேறு வழங்குனர்களால் செயலாற்றற் பிணைக்காக வைப்புச் செய்யப்பட்டு 2 முதல் 6 ஆண்டுகள் வரையான காலமாக நிலவிவரும் ரூபா 14,344,600 தொகை வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கோ தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

104(3) மற்றும் (4) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆரம்ப அறிக்கைகளும் முழு அறிக்கைகளும் 19 வாகன விபத்துக்கள் தொடர்பில் 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 801,681,308 ஆகக் காணப்பட்டதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 603,498,864 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், நிதி விளைவுகளில் ரூபா 198,182,444 தொகையான அதிகரிப்பு சுட்டிக்காட்டப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் போது வியாபாரப் புரள்விலான ரூபா 411,346,976 தொகை அதிகரிப்பு அவ் அதிகரிப்பிற்கு முக்கியமான காரணமாகியது.

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது செயற்பாடற்ற வருமானத்தில் ரூபா 58,265,410 தொகை அதாவது 36.55 சதவீத அதிகரிப்பு காணப்பட்டது. வட்டி வருமானம் 39.07 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் அந்நிய செலாவணி விகிதம் மாற்றமடைந்ததன் மூலம் 505.27 சதவீத இலாபம் இதற்குக் காரணமாகியிருந்தது.

### 2.2 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக ரம்புக்கன் ஒய நீர்த்தேக்கத்திற்கு உட்படும் காணியில் இருந்து மரங்களை அகற்றுகையில் நேர்ந்திருந்த முறைகேடுகள் மற்றும் மோசடிகள் காரணமாக அரசாங்கத்திற்கு

ஏற்பட்டிருந்த நட்டத்தொகையான ரூபா 35,169,565 தொடர்பில் தெகியத்த கண்டிய நீதவான் நீதிமன்றத்தில் ‘‘பீ’’ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பகவன்தலாவை வெபல்டன் வியாபார சமப்படுத்தற் காணி நிலத்தில் அதிகாரமற்ற வெட்டி அகற்றல் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத் தொகை ரூபா 32,462,148 எனவும் அந் நட்டம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டும் எனவும் வனப் பாதுகாப்பு நாயகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 43.3 சதவீத மொத்த இலாப விகிதம் மீளாய்வாண்டின் போது 47.29 சதவீதம் வரை 3.99 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் தேறிய இலாப விகிதம் 10.52 சதவீதத்தில் இருந்து 5.03 சதவீதம் வரை 5.49 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

### (ஆ) திரவ விகிதம்

| திரவ விகிதம் | ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதம் | 2012 | 2011 |
|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1 | 3.74:1 | 4.38:1 |
| விரைவுச் சொத்து விகிதம் | 1:1 | 2.75:1 | 3.24:1 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### (அ) மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள்

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் உள்ளபடியான உற்பத்தி, மதிப்பிடப்பட்ட உற்பத்தியுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | மதிப்பிடப்பட்ட உற்பத்தி | உள்ளபடியான உற்பத்தி | முரண்கள் சாதகம்/ (பாதகம்) | முரண்கள் சாதகம்/ (பாதகம்) % |
|---|---|---|---|---|
| சந்தன மரங்கள் (கன மீற்றர்) | 90,713 | 132,859 | 42,146 | 46.46 |
| அரிந்த மரங்கள் (கன மீற்றர்) | 6,745 | 4,955 | (1,790) | (26.54) |
| மின்மாற்றிக் கம்பங்கள் (அலகுகள்) | 33,500 | 30,469 | (3,031) | (9.05) |
| சிலிப்பர் கட்டைகள்- (அலகுகள்) | 81,300 | 117,306 | 36,006 | 44.29 |
| வட்டக் கம்பங்கள் (அலகுகள்) | 59,450 | 152,837 | 93,387 | 157.08 |
| வேலிக் கம்பங்கள் (கன மீற்றர்) | 46,400 | 79,608 | 33,208 | 71.57 |
| விறகு – (அலகுகள்) | 53,350 | 104,316 | 50,966 | 95.53 |
| சுவருக்குப் பொருத்தும் மரம் – (நீள மீற்றர்) | 30,000 | 1,850 | (28,150) | (93.83) |
| யானை வேலிக் கம்பங்கள் - (கன மீற்றர்) | 34,250 | 50,674 | 16,424 | 47.95 |
| தளபாடப் பொருட்கள் - ரூபா மில்லியன் | 172.8 | 156 | (16.8) | (9.72) |
| மர இறக்குமதி – (அலகுகள்) | 5000 | குறிப்பிடப்பட வில்லை | - | |

**(ஆ) அரிந்த மரங்களின் விற்பனை**

மீளாய்வாண்டில் அரிந்த மரங்களின் விற்பனையிலிருந்து ரூபா 201,351,085 தொகையான வருமானம் கிடைக்கப்பெற்றிருந்தது. மீளாய்வாண்டிற்கான பாதீட்டு விற்பனைகள் ரூபா 425,200,000 ஆகக் காணப்பட்ட போதிலும் அவ் இலக்கை அடைவதற்கு ரூபா 223,848,915 ஆல் அதாவது 52.6 சதவீதத்தை அடைய முடியாதிருந்தது. சந்தையின் போட்டி விலைகளுடன் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு செயற்பட

முடியாமையால் நாடெங்கிலுமான விற்பனைப் பிணைப்பு இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அரிந்த மரங்களின் விற்பனை மிகவும் குறைவான நிலையை அடைந்திருந்தது.

**(இ) தளபாடப் பிரிவு**

(i) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் உள்ளபடியான தளபாட விற்பனை ரூபா 126.218 மில்லியனானதுடன், இது ரூபா 247.214 மில்லியனான பாதீடு செய்யப்பட்ட விற்பனைகளைப் பார்க்கிலும் ரூபா 121 மில்லியன் தொகையால் குறைவைக் காண்பித்தது. இப் பிரிவின் தேறிய நட்டம் ரூபா 13.12 மில்லியனாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விற்பனை 3.67 சதவீதத்தால் அதிகரித்தமை, நிலைய நிர்வாகச் செலவினம் 22.63 சதவீதத்தால் அதிகரித்தமை விற்பனை விநியோகச் செலவினம் 43.9 சதவீதத்தால் அதிகரித்தமை இப்பிரிவில் நட்டத்திற்குக் காரணமாகியிருந்தது.

(ii) தளபாடங்களின் கிரயத்தை குறைக்காமை இந் நட்டத்திற்குப் பிரதான காரணமாகியிருந்தது.

**(ஈ) மர டிப்போ**

டிப்போவிற்காக தயாரிக்கப்பட்டிருந்த இலாப நட்டக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய இலாபம் ரூபா 408,883,574 ஆகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 303,550,284 ஆகக் காணப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் சந்தன மரங்களின் விற்பனை பாதீடிடப்பட்ட ரூபா 1,396,845,000 இனைப் பார்க்கிலும் ரூபா 317,310,858 ஆல் 22.72 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. சந்தன மரங்களின் சந்தன மரங்களின் விற்பனை மொத்த விற்பனை வருமானத்தில் 52.43 சதவீதமாகக் காணப்பட்டது. சிறிய அளவிலான சந்தன மரங்கள் தனியார் காணிகளில் இருந்தும் அன்பளிப்புகளின் மூலமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் மிகுதியான மொத்த அளவு வன பாதுகாப்புத் திணைக்களத்தின் வனப்

பயிரீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட மரங்களாகும். இம் மரக்குற்றிகளை அரிந்து கொண்டுசெல்லல் தனியார் ஒப்பந்தங்களின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் 2012 ஆம் ஆண்டின் போது மரக்குற்றிகளின் விற்பனையான ரூபா 1,739,141,867 தொகையில் 13 சதவீதமான ரூபா 226,322,521 மரக்குற்றிகள் அரிந்து கொண்டுசெல்வதற்காக செலுத்தப்பட்டிருந்தது.

**(உ) சிலிப்பர் விற்பனை**

மீளாய்வாண்டின் போது மொத்த சிலிப்பர் விற்பனை ரூபா 728,996,144 ஆகக் காணப்பட்டதுடன் இது பாதீடிடப்பட்ட ரூபா 670,725,000 தொகையான விற்பனையைப் பார்க்கிலும் 8.69 சதவீத அதிகரிப்பாகக் காணப்பட்டது. உள்நாட்டு சிலிப்பர் உற்பத்தியின் ஏகாதிபத்தியம் கூட்டுத்தாபனத்திடம் உள்ளதுடன் இது வரையில் உற்பத்தி செய்யப்படும் சகல சிலிப்பர்களும் புகையிரதத் திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்படுகின்றன.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) ஓய்வூதியப் பணிக்கொடைத் தொகைக் கொடுப்பனவு – வேலைத்தள உத்தியோகத்தர்கள்

மர விநியோகத்தின் போது ஏற்பட்ட முறைகேடுகளால் சிறையிலிடப்பட்டிருந்த பயிற்சிக் காலத்தில் இருந்த வேலைத்தள உத்தியோகத்தர் ஒருவர் 2002 யூன் மாதம் வேலை இடைநிறுத்தப்பட்டதை அடுத்து முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படாது மீள சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். மேலும், நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் உத்தியோகத்தர் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தமையால் மீள 2005 திசெம்பர் 05 ஆம் திகதி வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். இவ் வழக்குத் தீர்ப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டின் பிரகாரம் 2010 நவம்பர் மாதம் உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டிருந்தார். இவ் வேளையில் இவர் அங்கீகாரமின்றி வெளிநாட்டிற்குச் சென்றிருந்ததுடன் 09 ஆண்டுகளின் பின்னர் நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின்

போது உத்தியோகத்தர் குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தமையால் நிலுவைச் சம்பளங்களுடன் மீள சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அன்றிலிருந்து 7 நாட்களின் பின்னர் அவர் சேவையை விட்டு விலகி மீண்டும் வெளிநாட்டிற்குச் சென்றிருந்தார்.

அவ் உத்தியோகத்தர் பயிற்சிக் காலப்பகுதியின் போது அங்கீகாரமின்றி வெளிநாட்டிற்குச் சென்றிருக்கையில் சேவையிலிருந்து நீக்குவதற்குப் பதிலாக ரூபா 119,160 தொகையான பணிக்கொடைக் கொடுப்பனவாகவும் நிலுவைச் சம்பளம், ஊழியர் சேமலாபப் பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பாக ரூபா 1,957,174 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அக் கொடுப்பனவு முகாமைத்துவத்தின் திறனின்மையால் மேற்கொள்ளப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மர விநியோகத்திற்கான கொடுப்பனவு

மரங்களும் மர உற்பத்திப் பொருட்களும் அவ்வப்போது களஞ்சியத்திற்கு வழங்கப்படுகையில் அவற்றில் ரூபா 12,843,873 பெறுமதியான ஒரு பகுதி மர வழங்குனருக்கு முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. களஞ்சிய விநியோகத்தை நிறைவேற்றிய மர வழங்குனர்களுக்கு இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் முற்பணத் தொகை கழிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்பட்டிராமையால் மர விநியோக முற்பணம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தமையால் மர விநியோகக் கொடுப்பனவு தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு நலிவானதென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) கணக்கீட்டு தகவல் முறைமை ஒன்றைக் கொள்வனவு செய்தல்

கணனி கணக்கீட்டுத் தகவல் முறைமை ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 3,425,341 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பல அத்தியாயங்களுடன் தொகுக்கப்பட்ட கணனி கணக்கீட்டுத் தகவல் முறைமைக்கு ஆக்கபூர்வமாகச் செயற்படுத்துவதற்குத் தேவையான ஏனைய மேலதிக அத்தியாயங்கள் 2013 செம்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் தொழிநுட்பம்) இன் கீழ் 10 உத்தியோகத்தர்களைக் கொண்ட தகவல் தொழிநுட்ப பிரிவொன்று இருக்கையிலும் வழங்கல் தொழிநுட்ப நிறுவனத்தால் கூட்டுத்தாபனத்தின் தேவைப்பாட்டை இனங்கண்டு தேவையான தொழிநுட்பத் தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருக்கையில் கொள்வனவு நடைமுறைக்கு உரித்தான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக பணி ஒப்படைப்பு அடிப்படையில் வெளி நபர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 312,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) கணனி முறைமையை ஸ்தாபிக்கையில் தேவையான சேர்வர் இயந்திரம் கொள்வனவு செய்யப்படாது மாதாந்த குத்தகை அடிப்படையில் ஒருவகை தொடர்பாடல் நிறுவனமொன்றிலிருந்து அவ் வசதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 611,933 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

அம்பாறை இரம்புக்கன் ஒய நீர்த்தேக்கத்திற்கு புதையுறும் காணியின் மரங்களை அகற்றுகையில் ஏற்பட்ட முறைகேடுகள் மற்றும் வன மோசடி காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 35,169,565 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தமை.

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வன பாதுகாப்பு நாயகத்தின் 2012 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய எப்ஜஎம்/எச்சீ/01/05 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அத்துமீறி

கடியம்பிடிய பாதுகாப்பு, நெல்லியத்த வனத்திலும் நுவரகல பாதுகாப்பின் எல்லைப் பகுதிக்கு மேலாக கன டெசி மீற்றர் 431,310 ஆன 1,196 காட்டு மரங்கள் அகற்றப்பட்டிருந்தன.

(ii) அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளுக்கு அப்பால் மரங்கள் வெட்டி அகற்றப்பட்டிருந்ததுடன் 2013 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறும் எந்த விதத்திலும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்படாத மொனறாகலை மாவட்டத்திற்கு உரித்தான காணிப் பகுதிகளின் பாரியளவு மரங்கள் வெட்டி அகற்றப்பட்டிருந்தன.

(iii) இவ்வாறு அத்துமீறி அகற்றப்பட்டிருந்த மரங்களின் ஸ்தாபிப்பு GPS பயன்பாட்டுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பகுப்பாய்வின் போது வெட்டப்பட்ட மரங்களில் பாரியளவானவை நீர்த்தேக்கத்திற்கு உட்படும் நீர் மட்டத்திற்கு மேலாக நடப்பட்டிருந்தன.

(iv) முழுமையான வேலைத்தளத்திலிருந்தும் விநியோகிக்கப்பட்ட மரங்கள் மிகவும் குறைந்த விலைக்கு மதிப்பிடப்பட்டு விற்பனை செய்து மிகவும் சிறந்த நிலையிலான மரங்கள் உப தரமிடப்பட்டிருந்தன. (நல்ல நிலையிலான மரக்குற்றிகள் இல்லை என்பதனைத் தீர்மானித்ததன்) மூலம் அரசாங்கத்திற்கு பெறவேண்டிய வருமானம் பாரியளவில் கிடைக்கப்பெறாது போயிற்று.

(v) இவ்வாறு வெளியாட்களால் வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்களிலிருந்து பெறப்பட்ட மரங்கள் வனத்தில் பல்வேறு இடங்களில் சேகரிக்கப்பட்டு அம் மரக்குற்றிகளில் பாரியளவானவை வேலைத்தளத்தில் காணப்பட்ட மரங்கள் என உரிய பதிவேடுகளில் பதியப்பட்டிருந்தது.

(vi) மரக் களஞ்சிய விநியோகங்களைப் பார்க்கிலும் மரம் வெட்டுமிடத்தில் மேற்கொள்ளப்படும் விற்பனைக்கு கூடியளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதுடன் வன அபிவிருத்தி திணைக்களத்தின் கணிப்பீட்டின் படி உயர் தரத்திலிருந்து 2 ஆம் தரம் வரையான மரங்கள் 2,676.57 கன மீற்றர்கள் களஞ்சியத்தில் விநியோகிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்குப் பதிலாக மரம் வெட்டுமிடத்தில் மேற்கொள்ளப்படும்

விற்பனைகளின் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெறாத பணத்தொகை ரூபா 35,169,605 ஆகும்.

(ஆ) மொனறாகல பலாறுவை தேக்கு மர வனப் பயிர்ச்செய்கையின் முழுமையான வெட்டி வீழ்த்தல்கள்

கேள்விச் சபையால் ஒப்பந்தக்காரருக்கு வேலைத்தளங்களை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நாட்களுக்கும் ஒப்பந்தக்காரர்களால் வேலைத்தளங்களின் மர விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நாட்களுக்கும் இடையேயான காலப்பகுதி 14 முதல் 115 நாட்கள் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் மர வழங்கலுக்காக ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் செல்லுபடிக் காலம் கடப்பதற்கும் முன்னர் முன்னைய உடன்படிக்கையின் செல்லுபடிக் காலத்தை உள்ளடக்கும் வகையில் ஒப்பந்தக்காரர்களுடன் மீள குறும் வேலை உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

புஸ்ஸ தளபாட உற்பத்தித் தொழிற்சாலைக்காக Finger Jointing இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்தல்

(அ) Finger Jointing இயந்திரம் ஒன்றை ரூபா 6,190,950 செலுத்திக் கொள்வனவு செய்து ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2013 செப்தெம்பர் 30 வரையிலும் எவ்வித உற்பத்தியும் சந்தைக்கு வழங்கப்பட்டிராததுடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தேவையான ஏனைய இயந்திரத்திற்காக மேலும் ரூபா 54.4 மில்லியன் தொகை செலவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. Finger Jointing உற்பத்தி வகை தீர்மானிக்கப்பட்டு இது தொடர்பான கிரயம் பகுப்பாய்வு செய்யப்பட்டு விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இவ்வியந்திரத்தின் உத்தரவாதக் காலம் 1½ வருடங்களைக் கடந்திருந்தும் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிராமையால் இயந்திரச் செயற்பாட்டில் ஏற்படக்கூடிய தொழிநுட்பக் கோளாறு

இனங்காணப்பட்டு அவை முகவர் நிறுவனங்களின் மூலம் திருத்திக்கொள்வதற்கான வசதிகள் அற்றுப்போயிருந்தன.

(இ) Finger Jointing இயந்திரத்திற்காக தற்போது செலவிடப்பட்ட செலவினமும் இயந்திர முறைமைக்கு தேவையான ஏனைய இயந்திரங்களும் மின்சார தொடர்பைப் போன்று தொழிற்சாலையின் இட வசதிகள் ஆகிய சகலவற்றையும் கருத்திற்கொள்கையில் இம் முதலீடு பொருளாதார ரீதியாக இலாபமற்றதாகியிருந்தது.

## 3.5 வினைவற்ற முதலீடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆம் ஆண்டின் போது ரூபா 468,000 தொகையான ஆரம்ப செலவினத்தை ஏற்று கூட்டுத்தாபனத்தால் கூட்டு வியாபாரம் ஒன்றை ஆரம்பித்து ரூபா 30,000,000 தொகை லங்கா டிம்பர் பிளான்டேஷன் கம்பனியில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2013 செப்தெம்பர் 30 வரையிலும் எவ்வித நலனும் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) 1985 செப்தெம்பர் 26 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தால் காணி நிரப்பி அபிவிருத்தி செய்யும் தனியார் கம்பனியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 தொகையான பங்கு முதலீடு தொடர்பாக 2013 செப்தெம்பர் 30 வரையிலும் எவ்வித நலனும் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

காசிற்கு விற்பனை செய்யும் விலைப்பட்டியல் புத்தகங்கள் அச்சீடும் வழங்கலும்

(அ) கூடிய விலைகளான தலா ரூபா 1,250 படி அச்சிடப்பட்ட புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 1,870,000 ஆகும்.

(ஆ) அச்சீட்டு நடவடிக்கைகளுக்காக அரசாங்க அச்சகரிடம் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் தனியார் அச்சீட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட முன்னர் உரிய அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.7 பதவியணி நிர்வாகம்

திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 2364 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளபடியான பதவியணி 2187 ஆகக் காணப்பட்டது.

### 3.8 வாகனப் பயன்பாடு

2012 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான வாகனங்களிற்கு ஏற்பட்ட பதியப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை 19 ஆகக் காணப்பட்டதுடன் இவற்றில் 9 வாகனங்களைத் திருத்துவதற்காக மாத்திரம் ரூபா 1,268,637 தொகை செலவிடப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட 9 வாகனங்களுக்காக காப்புறுதி நட்டஈடாக ரூபா 1,081,354 தொகை கிடைக்கப்பெற்றிருந்தது. எனினும், 2012 ஆம் ஆண்டின் போது வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டத்தைக் கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 6.1.1 ஆம் பந்தி மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்குகள் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக 2013 மே 06 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 4.2 கூட்டிணைந்த திட்டம் மற்றும் உபாயமார்க்கத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 பந்தியின் பிரகாரம் 03 ஆண்டுகளுக்குக் குறைவற்ற காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் வகையில் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தால் 2008 – 2012 காலப்பகுதிக்காக மாத்திரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறித்த சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதிகள் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சிற்கு, திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன் பிரகாரம், கூட்டுத்தாபனத்தால் 2013 ஆம் ஆண்டு உள்ளடங்கும் வகையில் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு உரிய நிறுவகத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வர்த்தமானியின் மூலம் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை விரிவாக்கலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த பின்வரும் நோக்கங்கள் கூட்டிணைந்த திட்டத்தினதும் உபாயமார்க்கத் திட்டத்தினதும் நோக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) மரங்களின் துணைப் பொருட்கள் உற்பத்தியும் விற்பனையும்

(ii) வனப் பயிரீடும், வன மீள் பயிரீடு மற்றும் வளப் பயிரினங்களை விஞ்ஞான ரீதியாகக் கட்டுப்படுத்தல்.

(iii) கமநல உற்பத்தி

(iv) காட்டை சார்ந்த உற்பத்தி மீளமைப்பு

(v) பிரம்புகளின் ஏற்றுமதி

## 4.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தகவல் மற்றும் தொழிநுட்ப, மக்கள் மற்றும் கட்டுப்பாடு போன்ற பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மரங்கள் மற்றும் மரம் சார்ந்த பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை மாத்திரம் உள்ளடங்கிய பதிவேடொன்றாகக் காணப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டிருந்த உபாயமார்க்கத் திட்டத்தில், செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் காலாண்டு அறிக்கைகளிலும் காண்பிக்கப்பட்ட விடயங்களின் பெறுமதிகளின் வேறுபாடு காரணமாக உள்ளபடியான செயலாற்றலைக் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்துவதற்கு எந்தப் பெறுமதிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது நிச்சயமற்றுக் காணப்பட்டது.

## 4.4 கொள்வனவுத் திட்டம்

கொள்வனவுத் திட்டம் பாதீட்டிற்கு இணையாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பாதீட்டில் அரிந்த மரங்கள் புரள்வு ரூபா 425,200,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனச் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அரிந்த மரங்கள் புரள்வு ரூபா 1,050,200,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.6 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றல்

மரம் தறிப்பதற்காக காணி நிலங்களை விடுவிக்கையில் வன அடர்த்தி மற்றும் வனக் காப்பு முடியுமானவரையில் பாதுகாக்கப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தால் அதற்கு இணங்காத வகையில் செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

(அ) சம்பத்நுவர பிரதேசத்தில் இயற்கைக் காட்டில் 392 மரங்கள் தறிக்கப்பட்டமை

மேற்குறித்த விடயத்திற்கு உரித்தாக அரச சார்ப்பற்ற நிறுவனம் ஒன்றினால் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தை பிரதிவாதியாக்கி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டிருந்ததுடன் ஒரு தனி மரத்தைத் தறித்திருப்பினும் இதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்குமாறு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பங்கலாவத்த வெபல்டன் வணிக ஐதாக்கப்பட்ட காணி நிலங்களில் அத்துமீறிய தறிப்புகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பங்கலாவத்த வெபல்டன் வணிக ஐதாக்கப்பட்ட காணி நிலங்களில் மரங்களைத் தறிக்கையில் அத்துமீறி ரூபா 32,462,148 பெறுமதியான மரங்கள் தறிக்கப்பட்டுள்ளதாகவும், அவ் அத்துமீறி தறிப்புகளைத் தடுப்பதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் செயற்பட்டிராமை மற்றும் அவற்றிற்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் சிலிப்பராக மாற்றப்படுவதற்கு மரக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் நேரடியாக துணை புரிந்திருந்துள்ளமை குறித்து 09 குற்றச்சாட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ii) இது தொடர்பாக விசாரிப்பதற்கு சுற்றாடல் அமைச்சால் நியமிக்கப்பட்ட 6 உத்தியோகத்தர்கள் அடங்கிய ஒரு குழுவால் வனப் பாதுகாப்பு

திணைக்களத்தின் மூலம் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்திற்கும் மேலதிக 5 குற்றச்சாட்டுக்களுக்கும் மோசடிகள் இடம்பெற்றுள்ளமை குறித்து 2012 மே 15 ஆம் திகதி உறுதிப்படுத்தியிருந்தது.

(iii) அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதி பொது முகாமையாளரால் (செயற்பாடு) 2012 யூன் 12 ஆம் திகதிய பொது முகாமையாளருக்கு விலாசமிடப்பட்ட ஒரு கடிதத்தின் மூலமும் நான்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் இல. 1 இலிருந்து 3 வரையான பரிந்துரைகளுக்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இவ்வாறே வனப் பாதுகாப்பு நாயகத்தின் 2012 ஏப்ரல் 25 ஆம் திகதிய உறுதிப்படுத்தப்பட்டுள்ளவாறு நேர்ந்துள்ள வன மோசடி தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோத்தருக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(ஆ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(உ) கொள்வனவுகள்
(ஊ) வாகனக் கட்டுப்பாடு